1991

# கொக்கட்டிச்சோலையில் நடந்த சில கொடூரங்கள்

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 31 ஆவி 18 ஞாயிறு 19 இதழ் 141

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2-7-1991

(மட்டக்களப்பு)

'வீடுகளைக்கொளுத்தி எரித்து விட்டு, அதற்குள் ஆண்கள் பலரைத் தள்ளி உயிருடன் தீயிட்டனர். இந்தக் கொடூரத்தில் தப்பிய ஆண்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர்.'

இவ்வாறு கொக்கட்டிச்சோலையில் அண்மையில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட படுகொலைச் சம்பவத்தில் பலத்த அடிகாயங்களுடன் தப்பிய கிராமவாசி

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை 5 மணியளவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பகுதியை நோக்கி பலாலி இராணுவத்தினர் ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணை கொண்டுவந்தோரை படையினர் எரிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

பள்ளிமுனைக்கடலில் படகில் வந்த கொக்குடுந்த 9பேரைக் கடற்படையினர் அவர்கள் கொண்டுவந்த மண்ணெண்ணெயை ஊற்றி தீயிட்டுக் கொளுத்த முயற்சித்தனர். கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி இவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்

# சர்ச்சையை கிளப்ப ஆயத்தம்!

(கொழும்பு)

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் எதிர்காலம் குறித்து பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. இது குறித்து இலங்கை அரசும் இந்திய அரசும் பெரும் கருத்து மோதல்களுக்குட்படும் ஓர் நிலையும் தோன்றியுள்ளதாம்.

இந்த ஒப்பந்தத்தை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவும், இந்திய அரசும் ஆதரிக்கும் அதே வேளை இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாசா கடுமையாக எதிர்த்தவிளார். மேலும் இந்த ஒப்பந்தத்தை கைவிட்டு புதிய ஒப்பந்தமொன்றைச் செய்யவேண்டுமென்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் கோரியுள்ளார்.

இதற்கிடையில் இவ்வொப்பந்தத்திற்கெதிராக இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் ,வொய்ஸ் ஒப் அமெ

(4-ம் பக்கம் பார்க்க)

## உலகின் சிறிய குழந்தை

(ஜாஸர்த்தா)

உலகிலேயே மிகவும் சிறிய குழந்தை இந்தோனேஷியாவில் உள்ள ஜாஸர்த்தா நகரத்தில் பிறந்துள்ளது.

இந்தக் குழந்தையின் நிறை 500 கிராம் மாத்திரமே என வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். இந்தக் குழந்தையின் பெற்றோர் விவசாயிகள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் ஷெல், விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாமைச் சுற்றிய பகுதியில் நேற்றுக்காலை கடும் விமானத் தாக்குதலும், முகாமிலிருந்து பலத்த ஷெல்

(4-ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் இராணுவம் பின்வாங்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டவாகல் பொதுமக்களின் 4 வீடுகளை தீயிட்டுக் கொளுத்தியிட்டு

(4ம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலைக்கு முன்னர்

## இரு பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன!

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்ய கடந்த வருடம் அக்டோபர் மாதத்திலிருந்தே திட்டம் வகுக்கப்பட்டதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் முக்கிய பத்திரிகையான "இந்தியா ரூடே" செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது.

இந்திப்பட்டத்தை செயற்படுத்த நான்குபேர் கொண்ட குழு ஆன்றிலிருந்தே செயற்பட்டு வந்ததாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் இருமுறை பரிசோதனை முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் வீரவேங்கை சிவானந்தன் (நடராசா நவலேஸ் வரன் ஜெயந்தி நகர் - இவி நொச்சி) வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

கொழும்பு குண்டுத் தாக்குதல்:

## குண்டுகளைத் தயாரிக்க பயன்படுத்திய 5 வீடுகள் அரசால் பறிமுதல்

(கொழும்பு)

கொழும்பில் ஐந்து வீடுகளை அரசு பறிமுதல் செய்யவுள்ள தாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடுப்பமைத் தகவலைய தாக்குதல், முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொலைச் சம்பந்தமாக விசாரணை செய்யும் புலனாய்வுத் துறையினர் 28 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

இவர்களுக்கு புகலிடமாயும் குண்டுகளைத் தயாரிக்குமிடமாயும் பயன்படுத்தப்பட்ட ஐந்து வீடுகளைப் பாதுகாப்புப் படையினர் நேற்றுமுன்தினம் 'சீல்' வைத்துள்ளனர். (பூ)

## ராஜீவ் கொலை விசாரணை பலநாடுகளுக்கும்விஸ்தரிப்பு

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான விசாரணை இலங்கை உட்பட பல நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக 'இந்திய மத்திய புலனாய்வுத் துறை' தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை குறித்து

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு போகும் பயணிகள் படும் அவதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலிருந்து கொழும்பு போன்ற வெளியிடங்களுக்கு பிரயாணங்களை மேற்கொள்ளும் பயணிகள் வவுனியா பகுதிகளிலும், தடுப்புமுகாம்களிலும் பெரும் இக்கட்டைப்படுத்தப்படுவதாக அங்கிருந்துவரும் பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா இராணுவ சோதனைப்பகுதிக்கு நடந்து செல்லும் காட்டுப் பகுதிகளில் சில இடங்களில் இன்னதெரியாதவர்கள் நிறை பெண்களிடம் நகைகளையும், பணங்களை

யும் இரவு நேரங்களில் அபகரித்துக்கொண்டு இராணுவ முகாமின் பின் பக்கங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## மடு அகதி முகாமில் எம்.எஸ்.எவ். மருத்துவ குழு

(மன்னார்)

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் பராமரிக்கப்பட்டு வரும் மடுக் கோயில் அகதிகள் முகாமிற்கு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எம். எஸ். எவ். மருத்துவக் குழுவினரின் சேவை மீண்டும் கடந்த வாரத்திலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## இலவச உலர் உணவு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இலவச உலர் உணவு நிவாரணம் இம்மாதமும் வழங்கப்படவுள்ளது.

கடந்த மாதம் வழங்கப்பட்டது போன்று இம்மாதமும் இடம்பெயர்ந்தோருக்கு மூன்று கட்டை இலவச நிவாரணமும், 'அ' கட்டை உடையவர்களுக்கு ஒரு கட்டை இலவச நிவாரணமும் 'உ' கட்டை உடையவர்களுக்கு, நிர்ணய விலையிலும் உணவுப்பொருட்களை வழங்கப்படவுள்ளது. (கி)

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வைத்திய நிபுணர்களினால் கொழும்பு செல்வதற்கென சிபாரிசு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களை அழைத்துச் செல்லும் உறவினர்களையும் சகல ஆவணங்களுடன் எதிர்வரும் நான்காம் திகதியும், ஐந்தாம் திகதியும் காலை 8 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் காரியாலயத்தில் பதிவுசெய்யும்படி பிரதிப்பணிப்பாளர் செல்வி நவமணி கனகரத்தினம் கேட்டுள்ளார். (56)

# வரி விளம்பரம்

## "முள் முடி மன்னர்கள்"

சமூக நாவல் ஒன்றைக் காகம் விடாமல் கரைந்து கொண்டிருந்தது என்று ஆரம்பித்து "அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம் தமிழினத் தாயகத்தின் விடுதலைகாணப் பேராடுவோம்" என்பது வரை யதார்த்த மாகவே எழுதியிருக்கிறார் சிதம்பர திருச்செந்திநாதன். விற்பனைக்கிறது.

[சி-4926]

## தேவை

இனிப்பு வகைகள், ரொட்டி வகைகள் ஆகியன செய்ய அனுபவம் வாய்ந்தவர்கள், நல்ல தொழில் நுட்பம் ஐந்து வருட முன் அனுபவம் உடையவர்கள் உடன் தேவை. 08-07-91க்கு முன் நாயகி யூறடொக்ஸன் ஸ்தாபனத்தாருடன் தொடர்புகொள்ளவும். [நாயகி யூறடொக்ஸன் வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை, தாவளை.

[சி-4932]

## அதிர்ஷ்டம் அழைக்கிறது

கல்வித் துறை, விவசாயத் துறை, தொழில் பிரச்சனை, கடன்தொல்லைகள் தீர உங்கள் சாதகத்தை ஆராய்ந்து பலன் கூறுவோம். நிவாரணம் பெற ஆலோசனைகளும், யந்திரங்களும் வழங்குகிறோம். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [காரசடிச்சந்தி] நல்லூர்.

[சி-4929]

## வைத்திய சேவை

பிணி தோஷம் போன்றவையும் மன நிலை மாற்றம் மற்றும் நீடித்த வியாதிகளை நிவர்த்திசெய்து இன்பவாழ்வு பெறவும், இலவச ஆலோசனையும் சிகிச்சையும். டாக்டர் எம். கருணாகரன், வொளாந்தண்ணி வைத்திய நிலையம் 616, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்நகர். குறிப்புப் பதிவுக் கட்டணம் செலுத்தி முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும். (சி-4931)

## பரீட்சை (ஆண்டு 4)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் ஆண்டு 4 மாதாந்தப் பரீட்சை (மூன்றாவது) 07.07.91 ஞாயிறு மு. ப. 8-00 / பி. ப. 1-00 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி. ப. 4.00 மகிழ்வைத்தியசாலை முன் பாக, கொக்குவில் மேற்கு நடைபெறும். பதிவுசெய்யவும். புலமைப்பரிசில் மாதிரியில் 2ம் தவணைப்பாடத்திட்டத்திற்குள் நடைபெறும். [சி-4934)

## புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்வி நிலையத்தால் வெளியிடப்பட்ட 8 வினாத்தாள்களைக்கொண்ட மாதிரிப் பயிற்சி வினாக்கள். விலை ரூபா 35-00. ஆண்டு 5 Paper class ஆரம்பமாகியுள்ளது. 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [சி-4935)

# போலிப்பத்திரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்கள், உயிரிழந்தவர்கள் ஆகியோரின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் போலியானது என பதிவுக்காரியாலயத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில தரகர்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இப்படியான போலி பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை வழங்கியுள்ளதனால் அவர்கள் மேலதிக நிவாரண உதவிகளைப் பெறமுடியாத நிலையிலுள்ளனர். (56)

# ஈராசி பலன்

02-07-1991

செவ்வாய்க்கிழமை

மேஷம்: பி. ப. 4-12 வரை, சதயம் மு. இ. 11-28 வரை. மரணயோகம்.

இராகுகாலம் பகல் 2-56 முதல் மாலை 4 26 வரை.

எமகண்டம் காலை 10-26 முதல் 11 · 56 வரை.

மேடம்: குடும்பத்தில் குதூகலம், பணவரவு, பராக்கு.

இடபம்: களத்து வேற்றுமை, தொழில்லாபம், மனநிறைவு.

மிதுனம்: கண்ணிரோகம், மனஉடைக்கம், குடும்பபிரிவு.

கடகம்: பகைவர் தொல்லை, குடும்பபகை, அதிக அலைச்சல்.

சிங்கம்: தந்திரம், தொழில் முதலீடு, விருந்துபசாரம், கவிஉகற்பனைமிகுதி, அதிகாரிகள் உதவி, மகிழ்ச்சி.

கன்னி: ஏமாற்றம், விவாதப்பேச்சு, காரியதாமதம்.

துலாம்: உடல்உபாதை வாக்குவாதம், மறதி

விருச்சிகம்: கனவு, தொழில் சிறப்பு, மகிழ்ச்சிப்போக்கு பயணம்.

தனுசு: மனப்போராட்டம், அதிக யோசனை, தொழில் கேடு.

மகரம்: குடும்பம்: அரசு உதவி, அதிகாரிறப்பு, குடும்பசுகம்.

கும்பம்: முயற்சிகள் தாமதம், கடும்போக்கு, புத்திரர் செலவு.

மீனம்: வருமானம் சராசரி, வரவுக்கு மேல் செலவு.

ஜோஸ்யர்

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கற்போதைய கல்வி நிலை தொடர்பாக தமிழ் ஆசிரியர் சங்க தொழிற்சங்கப் பிரதிகளுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. ஸ்ரீரங், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இராஜன், தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் பங்குபற்றினர். தமிழ்ச்சங்க பிரதிநிதிகளும், யாழ். மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்கள் கடமை நேரம்

(வேலணை)

தீவகத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களும் தினமும் காலை 8-30 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை தாங்கள் கடமையாற்றும் பாடசாலைகளில் கட்டாயமாக தங்கியிருந்து கடமையாற்ற வேண்டுமென சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கும் பகுதிகளில் 50 இளைஞர் யுவதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் முதலுதவிப் பயிற்சியினை தற்போது வழங்கிவருகின்றனர்.

இவர்களது பயிற்சி வகுப்புகள் முடிவடைந்த பின்னர் பரீட்சை நடாத்தப்பட்டு வித்தியாலயத்தினர் முதலுதவிப் படையினர் தரத்தில் சேர்க்கப்பட்டு நற்சான்றிதழ் பத்திரம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்படவுள்ளது. (56)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தத்துவ பேராசிரியர் தா. சத்தியதாஸால் எழுதிய "விஞ்ஞான மாற்றம்" என்னும் சஞ்சிகை வெளியீட்டு வைபவம் இம்மாதம் 4-ம் திகதி வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு கல்வரணி வீதி வயிரவர் ஆலயத்தில், சங்கானை விக்னேஸ்வரா வித்தியாலய முன்னாள் அதிபர் சி. இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

வர்த்தக

# ஊழியர் விடுமுறை

[உடுவில்]

கன்னாகம் வர்த்தகர் சங்கம் அபேதநிதியிலுள்ள வர்த்தகர் நிலையங்கள் யாவும் சனிக்கிழமைகளில் அரைநாளும் ஞாயிற்றுக் கிழமைகளில் முழுநாளும் பூட்டப்பட்டு தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்கப்படவேண்டும் என்று சில வர்த்தகர்களுக்கும் அறிவித்துள்ளது.

தங்கக் கடத்தல்:

# கட்டுநாயக்காவில் ஜேர்மன் பிரஜை கைது

(தொழும்பு)

பெறுமதி வாய்ந்த இரத்தினக்கல் பதிக்கப்பட்ட தங்க நகைகளை இலங்கையிலிருந்து கடத்திச் செல்ல முற்பட்ட ஜேர்மனிய பிரசை ஒருவர் கட்டுநாயகா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

பிரஸ்தாப நபரை சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் 3 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 1 லட்சம் ரூபா பணத்தையும் இவரிடமிருந்து கைப்பற்றினர்.

இவர் போலி பயணமாக விருந்தது குறிப்பிடத்தக்கது. (சி)

யாழ். மாவட்ட

# அரச ஓய்வூதியர் சபை ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

"அரசசேவை ஓய்வூதியர், தற்போதுள்ள குத்தகையில், தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். வாழ்க்கைச் செலவுகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு செல்வதினால் மறுக்கப்பட்டிருக்கும், விசேட வாழ்க்கைச் செலவுப் படியை உடனே வழங்க ஆவன செய்யவும்"

மேற்படி தீர்மானம் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சபையினர் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ளனர்.

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர்சபையின் தலைவர் திரு. ஏ. வி. ஏ ஜே. விஜயரட்ணம் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது: தற்போதுவழங்கப்பட்டுவரும் இலவச நிவாரணம் எம்போன்ற ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி மகஜர் ஜனாதிபதி உட்பட நிதிஅமைச்சர், புனர்வாழ்வு புனரமைப்பு இயக்குநர், கூட்டுறவு ஆணையாளர், உணவு ஆணையாளர் யாழ். அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

# பாடசாலைகள் இயங்குகின்றன

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதை யடுத்து அலுவலகங்கள், பாடசாலைகள் வழமைக்குத் திரும்புகின்றன.

கடந்த இரு தினங்களாக அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் தமது கடமைகளுக்குத் திரும்பி வருவதை அவதானிக்க முடிகிறது. (150)

# இலவச வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் வடமராட்சி மெதடிஸ்த மாணவர்களின் நலனை கருதி இலவசமாக விஞ்ஞான கணித வகுப்புக்களை சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் உடுத்துறை வேற்றிலைக் கேணியிலுள்ள பாடசாலைகளில் நடாத்தி வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளில் தற்போது விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினை யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் இவ்வகுப்புக்களை நடாத்தி ஓரளவு நிவர்த்திசெய்துவருகின்றனர் (56)

# மஹா கும்பாபிஷேகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு காலையடி அருள்மிகு ஞானவேலாயுதசுவாமி தேவஸ்தான நூதனப் பிரஷ்டா மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 6 ம் திகதி வியாழக்கிழமையன்று நடைபெறவுள்ளது. (72)

0 0

(தொழும்பு)

புத்தளம் மாவட்டத்திலுள்ள வரலாற்று புகழ்பெற்ற விளங்கும் முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தில் மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 4ம் திகதி நடைபெறவிருக்கிறது.

# நோய்தடுப்பூசி மருந்து தடுப்பாடு

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகளுக்கு தீவிரமான தட்டுப்பாடு நிலவி வருகிறது. இத்தடுப்பூசி ஊசி போடுவதற்காக இளைப்பாறிய வைத்தியசாலைக்கு செல்லும் அவலநிலை இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மற்றும் விசர்நாய், குட்டொக்கிகளுக்கான தடுப்பூசி மருந்துகளுமும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் இப்பகுதி மக்கள் பரிதாபநிலைக்கு ஆளாகியுள்ளனர். (150)

# முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் யாழ். மாவட்ட தமிழ்த் தினப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்.

கொத்தணி, கோட்டா, மாவட்டப் போட்டியில் முதலாம் பிரிவில் சொல்வதெழுதல் போட்டியில் செல்வி பஞ்சலிங்கம் ஸ்ரீலா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். முதலாம் பிரிவில் பேச்சுப்போட்டியில் செல்வி தனபாலசிங்கம் ஜெயரூபா மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

# பழையமாணவர் சங்ககூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 6ம் திகதி வித்தியாலய அதிபர் திரு. வி. கே. ஏகாம்பரநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திலே வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலக உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (52)

# புதிய உதவி அரச அதிபர்

(பருத்தித்துறை)

பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபராக திரு. திருவாகரன் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (52)


வண்ணை நகர்

செந்தில் கதிர்வேலாயுத சுவாமி

நவேத்தர சஹஸ்ர

சங்காபிஷேகம்

(கும்பாபிஷேக தினம்)

04-07-1991 வியாழக்கிழமை

காலை 10-00 மணிக்கு மஹா சங்காபிஷேகம், உள் வீதி திருவுலா நிகழும்.

அன்றைய தினம் விசேட மங்கள இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நண்பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

[எ-1416]

## இன விகிதாசார முறையில் புகையிரதத் திணைக்களமும் ஊழியர் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இனவிகிதாசார அடிப்படையில்தான் எதிர்வே திணைக்களத்துக்கு ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இவ்வாறு இலங்கைரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

சிங்களவர் 75 வீதம், தமிழர் 12.7 வீதம், முஸ்லிம் 8வீதம் இந்திய தமிழர்கள் 5.5வீதம் ஆகிய விகிதப்படி இடம் பெறுவர்.

ஐந்தாம் தரத்துக்கு ஒத்த தான பொது அறிவு, பொது விவேகம்போன்ற பாடங்களில் பரீட்சைகள் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள். இப்பரீட்சைகளில் பதினெட்டு வயதுக்கும் நாற்பது வயதுக்கு [illegible] பட்டவர்கள் பங்கு [illegible] ஆர்" என்றார். (152)

## 334 பேருக்கு நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வன்செயல் காரணமாக ஊனமடைந்தவர்களின் நஷ்டஈடு கோரி இதுவரை 1734 விண்ணப்பங்கள் யாழ் செயலகப் புனர்வாழ்வு பகுதிக்கு கிடைத்துள்ளது.

இதில் 334 பேருக்குமட்டும் இதுவரை நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. 3 மில்லியன் ரூபா நிதி இதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. (153)

## விவசாயிகள் பாதிப்பு

(மாங்குளம்)

புலோலி மேற்கு ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்க அங்கத்தவர்களுக்கு மண்ணெண்ணை விநியோகம் இடைநிறுத்தப்பட்ட தால் விவசாயத்தை மேற்கொண்ட அங்கத்தவர்கள் பயிரை பாதுகாக்க முடியாதிருப்பதாக புகார் தெரிவிக்கின்றனர். (150)

## ஜெயலலிதாவின் கருத்து இலங்கை அரசு கவனத்தில் எடுத்துள்ளது

(தொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புதிய உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்படவேண்டும் என்ற தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கருத்தை இலங்கை கவனத்தில் எடுத்திருக்கிறது.

இதுகுறித்து "இந்தியாவின் ஆலோசனையை இலங்கை எதிர்பார்த்திருக்கிறது.

இவ்வாறு ஜனாதிபதியின் வெளிநாட்டு ஆலோசனைஞர் கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார். (152)

## புதிய 'முறையில் 1992முதல் ஆசிரியர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் இடமாற்றங்கள் 1992ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் புதிய முறையில் அமுல்நடத்தப்படும்;

இவ்வாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கேற்ப நிரப்பப்படும் இவ்வெற்றிடங்கள் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கோரி பரிசீலனை செய்து நிரப்பப்படும்.

புதிய பதவியுயர்வுமுறையும் அமுல் நடத்தப்படவுள்ளது. ஆசிரியசேவை மூன்று முதல் ஒன்றுவரை அல்லது ஐந்து முதல் ஒன்றுவரை நியமனம் பெறுவோர் படிப்படியாக தரம் உயர்த்தப்பட்டு முதலாம் தரத்துக்கு வருவார்கள். இவர்கள் உதவி ஆசிரியர்களாக, அல்லது அதிபர்களாக பதவி வகிக்கலாம். சம்பளம் ஒரே தன்மையாக இருக்கும்.

## பதவி வெற்றிடம் நிரப்பாது அரசு புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தில் உள்ள பதவிகளுக்கு உதியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மத்திய அரசும் மாகாண அமைச்சும் புறக்கணிப்புச் செய்வதாகத் தெரியவருகிறது.

இதுபற்றி கல்வித்திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; ஒரு வருடத்துக்கு ஆறுபதவிநிலை உதியோகத்தர்கள், இளைப்பாறியதாலும், மேலும் ஆறுபேர் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்று சென்றவெற்றிடங்களுக்கு அங்கிருந்து இரண்டுபேர் வந்துள்ளார்கள். இதனால் வேலைபளு அதிகமாக உள்ளது. இதுபற்றி காரண விளக்கம் அமைச்சுக்கும் மத்திய அரசுக்கும் கடிதமூலம் தெரியப்படுத்தி உள்ளோம் என்றார். (152)

## கூட்டுறவு ஊழியர்களுக்கும் கஷ்ட நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

'அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் கஷ்டநிவாரண ஊக்குவிப்புத் தொகையை கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கும்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.'

இவ்வாறு வடமாகாண கூட்டுறவு தொழிற்சங்கம், ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் கேட்டுள்ளது.

அக்கடிதத்திலேமேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பொது நிர்வாக அமைச்சு 7/91 சுற்றறிக்கை மூலம் திறைசேரியிடம் பணம்பெற்று கஷ்டப்பிரதேச ஊக்குவிப்புத் தொகை அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும்படி அறிவுறுத்துகிறது.

இதுகூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு வழங்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை பலனளிக்காது போய்விட்டது; புனருத்தாரண அமைச்சிடமாவது பணம் பெற்று இந்த ஊழியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கவும். (152)

## சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

(திருகோணமலை)

சிறந்த மாகாணத்திலே சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் விபுலாநந்தர் நூற்றாண்டு விழாக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

திருமலை நகரில் தற்போது இயங்கிவரும் விபுலாநந்தர் சங்கத்தினர் அவரின் நூற்றாண்டு நினைவு விழா தொடர்பாகக் கிறிஸ்மஸ்தினத்தன்று ஒன்றையும் வெளியிடவிருக்கின்றனர். (153)

## புதிய வெற்றிடங்கள் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு விண்ணப்பம்கோரி பரிசீலனை செய்து நிரப்பப்படும்

## இரு புளொட் உறுப்பினர் பலி

(வவுனியா)

வவுனியா சின்னக்குளம் முகாம் காவலரணில் இருந்து நேற்று முன்தினம் முதல்வகை 11 மணியளவில் வெளியேறிய சிறிலங்காப் படையினரையும் புளொட் குழுவினரையும் விடுதலைப் புலிகள் நொச்சிமோட்டைப் பாலத்தடியில் வைத்துத் தாக்கினர்.

இத்தாக்குதலில் இரண்டு புளொட் உறுப்பினர்கள் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## இலங்கைப் பெண்களுக்கு வெளிநாடுகளில் வேலை

[தொழும்பு]

ஒருலட்சத்திற்கும் அதிகமான இலங்கைப் பெண்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினைபெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு ஈடுபட்டுவருகிறது;

இத்தாலி, சைப்பிரஸ், லெபனான், அரபு நாடுகளிலிருந்து வீட்டுப் பணிப்பெண்களாக இவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.

இவர்களுக்கு மாதாந்த சம்பளமாக இலங்கை நாணயப்படி பத்தாயிரம்ரூபா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 42 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திலும் மற்றும் திணைக்களங்களிலும் தற்காலிகமாகக் கடமையாற்றிய 42 சிற்றூழியர்களும் பதவியுயர்வுடன் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 7 வருடங்களுக்கு மேலாக மேற்படி ஊழியர்கள் தற்காலிகமாகவே கடமையாற்றியுள்ளார்கள்.

இதுநேரம் கடந்த 17வருடங்களுக்கு மேலாக தரம் மூன்றிலிருந்து கடமையாற்றி வரும் நிரந்தர சிற்றூழியர்கள் தமக்கும் பதவியுயர்வு வழங்கப்படவேண்டும் என்று யாழ். அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வி)

## மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

சென்ற வாரம் வடமராட்சி கிழக்கு கடற்கரைப்பகுதியில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டு முள்ளனர்.

கட்டைக்காட்டைச் சேர்ந்த வயோதிப மீனவரான மத்தேயூ ஜேமிஸ் 65 வயது, மத்தேயூ யோகராசா மற்றும் ஆறு மீனவர்கள் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளாகி அப்பகுதியிலுள்ள வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (56)

## ஸொறி விபத்து: ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

குஞ்சுப்பரந்தன் ஏழாம் கட்டையில் ஸொறி ஒன்று பாலத்திற்குள் வீழ்ந்தால் சாரதி கிளீனர் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஐஸ்வரியம் திருச்செல்வம்(42வயது) சுசிலாதேவி திருச்செல்வம் (32 வயது) ஆகியோர் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

## அடையாள அட்டைகள் வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்ட அடையாள அட்டை விண்ணப்பங்களுக்குரிய அடையாள அட்டைகள் நீண்டகாலமாக யாழ் செயலகத்துக்கு வந்துசேரவில்லை.

ஆகஸ்ட் மாதமளவில் நடக்கவிருக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை, கல்விப்பொதுத்தராதர சாதாரண விசேட பரீட்சை டிசம்பர் மாதம் நடக்கவிருக்கும் க.பொ.த. சாதாரண பரீட்சைகளில் தோற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு ஆட்பதிவுத் திணைக்களம் அடையாள அட்டை உரிய காலத்தில் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. (135)

## தியாகி திலீபன் ஞாபகார்த்த தடகள விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் வெற்றிக் கேடயத்திற்காக தடகள (மெய்வல்லுநர்) விளையாட்டு விழா ஒன்றினை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வட்டுவல் செயலகங்களிலிருபாய் 2/-செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். வட்டுவைப் போட்டிக்களுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 10ம் திகதிக்கு முன்னதாக பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு விளையாட்டு வீரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எமது பிரதேசத்தில் விளையாட்டுக்களின் தரத்தை உயர்த்துவதன் பொருட்டும் எமது மக்களின் உடல் உள வளர்ச்சியினை பாதுகாக்கும் பொருட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மேற்படி போட்டிகளில் சகல விளையாட்டு வீரர்களையும் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றது. மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டு கழகங்களையும் உங்கள் பிரதேசவிளையாட்டுப் பொறுப்பாளர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலதிக போட்டி விபரங்களை பிரதேச செயலகத்திலும், விளையாட்டுப் பொறுப்பாளரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

## மகளிர் கல்லூரி அமைக்கும் முயற்சி இடைநிறுத்தம்

(வடமராட்சி]

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து மகளிர் கல்லூரி தனியாகப் பிரிப்பது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதுவிடயமாக மாணவர் பெரும் ஆர்ப்பாட்டத்துடன் இதனை எதிர்த்து கல்லூரியைப் பகிஷ்கரித்தும். பெற்றோர், ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்கங்கள், எதிர்ப்புத்தெரிவித்தும் யாழ். கல்விப்பணிப்பாளர், வடமராட்சிக்கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் அவசர மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்தனர்.

அவற்றில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை [illegible] கொண்ட யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர், வித்தியாலயம் பிளவுபடுவதை இடைநிறுத்தம் செய்யுமாறு வடமராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரிக்குப்பணித்துள்ளார்.

கிராமசேவையாளர்

# சொந்தப் பகுதிகளில் சேவைக்கு அமர்த்தப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது சேவையாற்றிவரும் கிராம சேவையாளர்கள், மீண்டும் அவர்களது சொந்தப் பகுதிகளில சேவைக்கு அமர்த்தப்பட இருப்பதாகத் தெரிவருகிறது.

அண்மைக் காலத்தில் பெரும்பாலான கிராமசேவையாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு, வெவ்வேறு பகுதிகளில் சேவையாற்றி வருவதால் பொதுமக்களுக்குப் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென்றும், இவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே கிராம சேவையாளர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்கு விரைவில் இடமாற்றம் செய்யப்பட இருப்பதாகவும், கிராம சேவையாளர்கள் இல்லாத இடங்களுக்கு புதியவர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

## பல்கலைக்கழக புதிய மாணவர் பதிவு 29ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 1990/91 ஆம் கல்வியாண்டுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 888 புதிய மாணவர்கள் இம்மாதம் 29-ந் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 1-ந் திகதி வரை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்படவிருக்கிறார்கள்.

மேற்படி கால எல்லைக்குள் தமது பதிவை பதிவு செய்யாத புதிய பல்கலைக்கழக மாணவர்கள் தமது பதிவை இழந்தவர்களாக கருதப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்படி கல்வியாண்டுக்கு மருத்துவ பீடத்திற்கு 109 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

பௌதிக விஞ்ஞானத்திற்கு 179 மாணவர்களுக்கும், உயிரியல் விஞ்ஞானத்திற்கு 103 மாணவர்களுக்கும், விவசாய பீடத்திற்கு 36 மாணவர்களுக்கும் கல்விப்பிரிவுக்கு 232 மாணவர்களுக்கும், வரலாறு பிரிவுக்கு 148 மாணவர்களுக்கும் தொழில் நிருவாகத்துறைக்கு 81 மாணவர்களுக்கும் மேற்படி கல்வியாண்டுக்குரிய அனுமதிகள் கிடைத்துள்ளன. (153)

திறந்து வைத்து

## விற்பனை செய்யப்பட்ட பாண் அழிக்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள உடுவில், மல்லாகம், இணுவில், சுன்னாகம் ஆகிய இடங்களிலுள்ள கடைகளில் சுகாதார விதிகளுக்கு மாறான முறையில் மூடி வைக்கப்படாது திறந்து வைத்து விற்பனை செய்யப்பட்ட பெருந்தொகையான பாண் யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தலைமையிலான பரிசோதனை குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

திறந்துவைத்து பாண் விற்பனை செய்வது சுகாதார விதிகளுக்கு முரண்பட்டதென்று யாழ். மாவட்ட உணவுமருந்து பரிசோதனை சம்பந்தப்பட்ட கடைகளுக்கு ஏற்கனவே பல தடவைகள் நேரில் சென்று அறிவுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (72)

## வித்தியானந்தன் நூலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நூலகத்திற்கு 'வித்தியானந்தன் நூலகம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த 15ந் திகதி நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. (153)

வன்செயல்களால்

## பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

1990-ம் ஆண்டு ஆனி மாதத்திற்குப் பின் ஏற்பட்ட வன்செயல்களினால் இறந்தவர்களின் படுகாயமடைந்தவர்களுக்கென அரசாங்கம் நஷ்டஈடாக ஒரு கோடியே 80 லட்சம் ரூபாவை முதல் கட்டமாக வழங்கவுள்ளது.

இதற்கான காசோலை தற்போது யாழ். செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இப்பணம் முதல் கட்டமாக 609 பேருக்கு வழங்கப்பட இருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இப்பணம் மிகவிரைவில் வங்கிகள் மூலம் உரியவர்களுக்கு வழங்கப்படுமென்றும் கூறப்படுகிறது. (சி)

## ஓய்வூதியம் பணமாக வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மே மாதத்துக்குரிய ஓய்வூதியம் இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் பணமாக வழங்கப்படவிருக்கிறது. முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் அடிப்படையில் ஓய்வூதியப்பணம் வழங்கப்படும்.

மஹாயவி ஓய்வூதியம் பெறுவோர் நற்கட்கிழமைகளில் மேற்படி கிளையில் ஓய்வூதியப்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சின்னமடுவில் படையினருக்கு சேதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தெற்கு சின்னமடுவில் நிலைகொண்டுள்ள படையினரின் காவலரண் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் 'அருள்-89' தாக்குதலை மேற்கொண்டதில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

புலிகளின் மேற்படி தாக்குதலை முறியடித்து முகாமிலிருந்து 50 கலிபர் தாக்குதலும் புளியங்கூடல் சந்திப் பகுதியை நோக்கி பல தடவை ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது. சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

நேற்றுக்காலையும் இப்பகுதியில் மோதல் சம்பவம் இடம்பெற்றதாக பிந்தியசெய்திகள் தெரிவித்தன. (56)

## இன்று

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கழகத்தில் கருத்தரங்குத் தொடர் - 04ல் இன்று செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் - மலாவிதீவுப் பிரச்சினை [வளைகுடா யுத்தத்தில் பின்னுள்ள நிலைமை என்னும் தலைப்பில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்குவார்.

பிற்பகல் 3 மணியளவில் நுண்கலைக் கலைரசனை மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பொறுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6ந் திகதி சனிக்கிழமை காலை 'லைரசபதி கலையரங்கில்' நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. துரைராசா தலைமையில் பட்டமளிப்பு விழா இடம் பெறவிருக்கிறது.

இவ்விழாவில் 644 பட்டதாரிகளுக்குப் பட்டம் அளிக்கப்படவிருக்கிறது. இதில் 476 பட்டதாரிகள் நேரில் சமுகந்தந்து பட்டங்களைப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கலாநிதி, கலைமாணி, முதுமாணி, விஞ்ஞானமாணி, வரித்தகமாணி, எம். பி. பி. எஸ். பட்டம், சித்த வைத்தியர் பட்டம், டிப்ளோமாப் பட்டம், டிப்ளோமா நுண்கலைகள் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட உள்ளன. (153)

## பென்சன் வவுச்சர்கள்

(மானிப்பாய்)

மே மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலகத்திலிருந்து தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஓடையம்பதி அருள்மிகு ஸ்ரீ கதிரவேலாயுதர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 4-ந் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இன்று செவ்வாய்க்கிழமை மேற்படி ஆலயத்தில் அடியார்களின் எண்ணைக்காப்பு வைபவம் இடம்பெறவிருக்கிறது. (153)

## மடு அகதி முகாமில்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

கிடைத்துள்ளது.

மேற்படி அகதிகள் முகாமில் எம். எஸ். எவ். மருத்துவக் குழுவின் வைத்திய நிபுணரும், தாதியரும் தற்போது கடமையாற்றுகிறார்கள். (153)

## ராஜீவ் கொலைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முறையாக கடந்த ஏப்பிரல் 18-ம் திகதி திரு. ராஜீவ் காந்தி சென்னை மெரினா கடற்கரையில் பேசிய போது இக்குழு அவரைக் கொலை செய்ய முயற்சித்து தோல்விகண்டது.

இரண்டாவதாக கடந்த மே மாதம் 18ந் திகதி திரு. வி. பி. சிங் தலைமையில் நடந்த கூட்டத்தில், ஒரு பெண்மணி திரு. கருணாநிதியின் காலைத் தொட்டு வணங்கினார்.

மூன்றாவது முறையாக, திரு. ராஜீவ் காந்தி தேர்தல் பிரசாரத்திற்காக சென்னை ஸ்ரீ பெரும்புதூர் வந்த சமயம் அதே பெண்மணி திரு. ராஜீவின் காலைத் தொட்டு வணங்கி, குண்டை வெடிக்க வைத்தாரென அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பூ)

## முல்லைத்தீவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற முயன்ற படையினர் புலிகளின் பலத்த தாக்குதலால் நிலைகுலைந்து முகாம் திரும்பினர்.

மேற்படி முகாமிலிருந்து முன்னேறிவந்து வீடுகளைக் கொளுத்தி வயின் மேலும் முன்னேற முயன்றபோதே புலிகள் வழிமறித்து பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்.

பல சேதங்களுடன் உடனடியாக அவ்விடத்திலிருந்து படையினர் முகாம் திரும்பினர். (சி)

## ஆனையிறவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதலும் இடம்பெற்றது

காலை 9 மணி முதல் 9-45 மணி வரை இரு குண்டுவீச்சு விமானங்களும், பயணிகள் விமானமொன்றும் 15க்கும் மேற்பட்ட குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன. மீண்டும் 12-30 மணி முதல் 1-45 மணி வரை இவற்றுடன் இணைந்து ஹெலியும் தாக்குதலை நடாத்தியது.

இதேவேளை முகாமிலிருந்து இயக்கச்சி நோக்கி குறிஞ்சாத்தீவை நோக்கி மாலை வரை பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. (56)

## இந்திய இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கா' வானொலி நிலையம் அமைக்க இலங்கை அனுமதி அளித்ததும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி மேற்படி அனுமதியைக் கண்டித்து இதனை நிறுத்துமாறு இந்திய சோரிவுள்ளதும் [முஜ்குதுபே இலங்கை வந்த இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்] இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## ராஜீவ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனை பூரணமாக எதுவித கவலும் கிடைக்காததை படுத்தே விசாரணை பல் நாடுகளிலும் நடத்தப்படவுள்ளதாம்.

இவ்விசாரணைக்கு 'இன்டர்போலும்' உதவிவருவது குறிப்பிடத்தக்கது. (கி)

## பலாலியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்த ஷெல்கள் தோட்டப் பகுதியை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் தர்மராசா ஸ்ரீக்குமார் (15 வயது) அளவெட்டி கடைக்கு படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

தலையடுத்து முகாமிலிருந்து

## கொக்கட்டிச்சோலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் பி.பி.ஸி.க்குப் பேட்டி அளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரிய குண்டுச் சத்தம் கேட்டதும், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் அங்கிருந்த வீடுகளில் ஒளிந்தனர். அங்கு வந்த படையினர் வீடுகளுக்குள் வைத்துச் சகலரையும் ஆயுதங்களாலும் பொல்லுகளாலும் மோசமாகத் தாக்கினர். பெண்கள் மீது மிக மோசமாக நடந்து கொண்டனர்.

ஆண்கள் அனைவரையும் வெளியே இழுத்து வந்து வீடுகளை தீவைத்து கொளுத்தி விட்டு அதற்குள் உயிருடன் தள்ளினார்கள் என்னையும் அவ்வாறு தள்ளிய போதும் ஒருவாறு சமாளித்து தப்பிவிட்டேன்.

பின் எல்லை கோயில் ஒன்றுக்கு சென்று கொண்டு அங்கு குப்புற படுக்க வைத்து மோசமாக தாக்கினார்கள். வீடுகளுக்கு தீவைப்பட்டவர்கள் பலர் எரிந்து கருகி விறகுபோலாகி விட்டனர் என்றார். (சி)

## உலகின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைப் பிரசவத்தின் மூலம் இந்தக் குழந்தை பிறந்திருக்கிறது. முதல் ஆறு மாதகாலத்திற்கு இக்குழந்தைக்கு மிகக் கவனமாகச் சிகிச்சை அளிக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மண்ணெண்ணை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெய்வாதீனமாக உயிர்தப்பி விடுதலை தீவு நோக்கி தப்பி வந்துள்ளனர்.

இவர்கள் மன்னார் நகரிலிருந்து பொருள்களுடன் பெருந்தொகையான மண்ணெண்ணெய் கொண்டு வந்த தாலேயே ஆத்திரமுற்றபடையினர் இவர்களை எரிக்க முயன்றனர்.

இறுதியில் இவர்களில் ஒன்பது பேரும் கடற்படையினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (56)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிதாபனத்தாரால் யாழ்ப்பாணம் நிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Jaffna under Licence Number B/180386/81